

நூற்பாலை / பின்னலாடை தொழிற்சாலைகளில்
வெளியூரிலிருந்து இடம் பெயர்ந்த பெண் தொழிலாளர்களுக்கான
தங்கும் விடுதி மற்றும் பணி தேர்வு செயல்முறை குறித்த

# வழிகாட்டும் ஆவணம்

TIRUPUR STAKEHOLDERS FORUM
TSF

திருப்பூர் தொழில்வளம் பங்களிப்போர் அமைப்பு

நூற்பாலை / பின்னலாடை தொழிற்சாலைகளில்
வெளியூரிலிருந்து இடம் பெயர்ந்த பெண் தொழிலாளர்களுக்கான
தங்கும் விடுதி மற்றும் பணி தேர்வு செயல்முறை குறித்த

# வழிகாட்டும் ஆவணம்

திருப்பூர் தொழில்வளம் பங்களிப்போர் அமைப்பு

பதிப்பு 1.0 தேதி 03 செப்டம்பர் 2011

(திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்காக ஓர் வழிகாட்டி)

உள்ளடக்கம் பக்கம் எண்கள்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 03-03 |
| I. | பணிக்கு தேர்வு செய்வதற்கான வழிகாட்டுதல் | 04-05 |
| II. | பணியில் இருக்கும் பொழுது கொடுக்கப்படும் பயிற்சிக்கான வழிகாட்டுதல் | 05-06 |
| III. | பணி நிபந்தனைகள், பணி நேரம் மற்றும் ஊதியம் தொடர்பான வழிகாட்டுதல் | 07-07 |
| IV. | விடுதிகள் இயங்குவதற்குண்டான பரிந்துரைகள் | |
| அ) | பொது | 08-09 |
| ஆ) | விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் | 09-09 |
| இ) | சுதந்திரமாக செயல்படுதல் | 09-10 |
| ஈ) | கண்காணிப்புக் குழு | 10-10 |
| உ) | வசதிகள் | 11-12 |
| ஊ) | உணவு | 13-13 |
| எ) | துவைத்தல் மற்றும் சுத்தம் செய்தல் | 14-15 |
| ஏ) | கழிவுகளை வெளியேற்றும் முறை | 15-15 |
| ஐ) | பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் பொது நல செயல்கள் | 16-16 |

## முன்னுரை

திருப்பூர் தொழில்வளம் பங்கேற்ப்போர் அமைப்பு என்பது திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், தொழிற்சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் ப்ராண்ட் எதிக்ஸ் பணி குழுமம் ஆகியோரை கொண்டு அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். திருப்பூர் தொழில்வளம் பங்கேற்போர் அமைப்பு பெண் தொழிலாளர்களுக்கு (இதன் மேற்கொண்டு தொழிலாளர்கள் என்றே குறிப்பிடுவோம்) தங்குவதற்குரிய வசதிகளை தர விரும்பும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களின் நன்மைக்காக வழிகாட்டும் ஆவணம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த வழிகாட்டும் ஆவணம் இடம் பெயர்ந்து வந்து பணிக்கு வரும் வெளியூர் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான தங்குமிடம் வழங்கும் உறுப்பினர்களுக்கு உதவும்..

இந்த வழிகாட்டும் ஆவணம் உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதலுக்கு மட்டுமே பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் உள்ள எந்த ஒரு பிரிவிலும் கூறப்ப்பட்டுள்ளவை உள்ளூர் மற்றும் தேசிய சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைவிட எளிதாயிருந்தால், உள்ளூர் மற்றும் தேசிய சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளே பின்பற்றபட வேண்டும். இந்த வழிகாட்டும் ஆவணம் கீழ்கண்ட மூன்று தொழிற்சாலைகளுக்கும் உபயோகப்படுத்தலாம் (இனி மேற்கொண்டு தொழிற்சாலை என்றே கூறலாம்).

**I.** பின்னலாடை ஏற்றுமதி செய்யும் அங்கத்தினர்களின் விடுதியுடன் கூடிய நூற்பாலை மற்றும் பின்னலாடை உற்பத்தி நிறுவனம்

**II.** பின்னலாடை ஏற்றுமதியாளர்களின் விடுதியுடன் கூடிய தனித்து இயங்கும் நூற்பாலை

**III.** விடுதியுடன் கூடிய பின்னலாடை உற்பத்தி நிறுவனம்

## I. பணிக்கு தேர்வு செய்வதற்கான வழிகாட்டுதல்: -

1) தொழிலாளிகளுக்கு விடுதியுடன் கூடிய வசதியினை கொண்டிருக்கும் தொழிற்சாலைகள் சுமங்கலி போன்ற எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக் கூடாது.

2) தொழிற்சாலைகள் பணியாளர்களை நேரடியாக தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யும்பொழுது அவர்களிடம் அவர்களது பணியின் தன்மை, சம்பளம், இதர பலன்கள், தங்கும் வசதிகள், etc., போன்ற விபரங்களை அவர்களது வட்டார மொழியில் விளக்க வேண்டும்.

3) தொழிற்சாலைக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் சட்டபடியான வயதினை அடைந்திருக்கிறார்களா, மற்றும் அவர்களது வயதிற்க்குரிய பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். மேலும், தொழிலாளர்களது வயது சான்றிதழ்களின் நகல்களை தக்க சட்டத் தேவைகளை கருத்தில் கொண்டு அவர்களது தனி நபர் கோப்புகளில் பராமரிக்க வேண்டும்.

4) கல்வி தகுதி, பணியில் முன் அனுபவம் மற்றும் நேர்காணலில் செயல் திறன் - ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் அல்லது அனைத்தின் அடிப்படையிலும் பணிக்கு தேவையான நபரை தேர்ந்தெடுத்து அமர்த்துதல் வேண்டும்.

5) பணியில் சேரும் வாய்ப்பினை மதம், இனம், ஜாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இது போன்ற பாகுபாட்டை ஏற்படுத்தும் எந்த ஒரு காரணத்தினையும் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சமமான வாய்ப்பு என்ற அடிப்படையில் வழங்கவேண்டும்.

6) தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களிடமிருந்து, வயது, புகைப்படம், முகவரி மற்றும் கல்வி தகுதி சான்றிதழ்களின் நகல்களையே பெறுதல் வேண்டும். பணி நிமித்தம் காரணமாக எந்த ஒரு அசல் சான்றிதழையும் பெறுதல் கூடாது; நேர்முகத் தேர்வின் பொழுது சரிபார்க்க மட்டுமே அசல் சான்றிதழைப் பெற்றுக் கொண்டு, சரிபார்த்தபின் அவற்றை உடனடியாக திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்..

7) பணிக் காலம் மற்றும் நிபந்தனைகள் சட்டப்படி இருத்தல் வேண்டும்; பணியாளர்களை குறைந்தபட்சம் குறிப்பிட்ட வருடங்களுக்கோ அல்லது காலத்திற்கோ பணிபுரிய அவர்களது பணி நிபந்தனைகளில் உட் பிரிவோ அல்லது எதிர்பார்ப்போ அல்லது ஒப்பந்தமோ நிர்வாகத்தினரால் செய்யப்பட்டிருக்கக் கூடாது;

8) பணிக் காலம் மற்றும் நிபந்தனைகள் சட்டப்படி இருத்தல் வேண்டும்; வெளியூரிலிருந்து வேலைக்கு வரும் பணியாளர்களுக்கும் மற்றும் உள்ளூரிலிருந்து வேலைக்கு வரும் பணியாளர்களுக்கும் இடையே எந்த ஒரு நிலையிலும் பாகுபாடு இருத்தல், கூடாது.

9) பணிக்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு நியமனக் கடிதத்தினை அவர்களது மொழியில் அவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் நகலுடன் கொடுத்து பணியின் பெயர், பணியின் தன்மை, ஊதியம், பணி இடம், பிடித்தங்கள், etc., உட்பட பணி நியமன நிபந்தபனைகளை தெளிவாக விளக்க வேண்டும். பணி நியமனக் கடிதத்துடன் வேலை நேரம், விடுப்புக் கொள்கை, சம்பளம் தொடர்புடைய சட்டப்படி பலன்கள் ஆகியவற்றை விளக்கும் கையேட்டினை இணைத்து தர வேண்டும். மேற்கூறிய அனைத்தையும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் பணியாளர்களுக்கு சரியானதொரு பயிற்சியை அளிக்க வேண்டும்.

10) பணிக்கு தேர்வான நபர்கள் நியமனக் கடிதம் மற்றும் அதன் இணைபொருளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை புரிந்துகொண்டு நியமனக் கடிதத்தின் நகலில் கையொப்பமிட்டு தொழிற்சாலைக்கு திருப்பித் தர வேண்டும். பணி நியமனக் கடிதத்தின் நகலை பணியாளர்களின் தனி நபர் கோப்பில் இணைத்தல் வேண்டும்.

## II. பணியில் இருக்கும் பொழுது கொடுக்கப்படும் பயிற்சிக்கான வழிகாட்டுதல்: -

1) தொழிற்சாலைகள் தங்கள் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு போதுமான பயிற்சியினை வழங்க வேண்டும்.

அ) **பொது அறிமுக பயிற்சி** - தொழிற்சாலைப் பற்றிய பொது விபரங்களை விவரித்தல்;

ஆ) **குறிப்பிட்ட அறிமுக பயிற்சி** - பணியின் தன்மை, பணியினை நிறைவேற்ற செயல்முறைகள், மூத்த அதிகாரிகள் மற்றும் கீழ்நிலை ஊழியர்கள் குறித்த விபரங்களை விளக்குதல்;

இ) **பணி பயிற்சி** - பணியினை திறம்பட செய்ய பயிற்சி;

ஈ) **சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அம்சங்களில் பயிற்சி** - முதல் உதவி, தீ அணைப்பு, தனி நபர் பாதுகாப்பு சாதனங்களை உபயோகபடுத்துதலின் அவசியம், அவசர கால முன்னேற்பாடு தொடர்பான பயிற்சி வழங்குதல்;

உ) பணியாளர்களின் உரிமைகள், நன்மைகள் & பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி அளித்தல்;

ஊ) மற்ற உரிய பயிற்சிகள்

2) தொழிற்சாலைகள் தங்கள் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு போதுமான விழிப்புணர்வை வழங்க வேண்டும்.

அ) நன்னடத்தை விதிமுறைகள்;
ஆ) பாலியல் பலாத்காரம் தடுப்புக் கொள்கை மற்றும் செயல்முறைகள்;
இ) குறைகளை களைதல் பற்றிய செயல்முறைகள்;
ஈ) பாகுபாடின்மைக் கொள்கை;
உ) தகாத முறையில் நடத்துதலை எந்த வடிவத்திலும் தவிர்த்தல்;
ஊ) ஆலோசனை பெட்டி
எ) பணியாளர்களது சுதந்திரம்;
ஏ) மற்ற உரிய கொள்கைகள் & செயல்முறைகள்;

3) மேற்சொன்னவாறு பயிற்சியோ அல்லது விழிப்புணர்வு நிகழ்வுகளோ வழங்கும் பொழுது, தொழிற்சாலைகள் கீழ்கண்டவற்றை உறுதி செய்ய வேண்டும்: -

அ) பயிற்சி திட்டம் மற்றும் அட்டவணைகள் உருவாக்கப்பட்டுள்ளது;
ஆ) உள்ளூர் மற்றும் வெளியூர் பணியாளர்கள் அனைவருக்கும் அனைத்து பயிற்சி & விழிப்புணர்வுகள் நடத்தப் படுகிறது;
இ) பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பற்றிய முக்கியமான குறிப்புகளை விளக்க எளிய வார்த்தைகள் மற்றும் படங்களுடன் கூடிய குறியீடுகள் உபயோகபடுத்தப் படுகிறது;
ஈ) பயிற்சி பணி நேரங்களில் மட்டுமே வழங்கப்படுகிறது;
உ) பயிற்சிக் கட்டணம் ஏதும் இல்லாமல் இலவசமாக வழங்கப்படுகிறது.

III. பணி நிபந்தனைகள், பணி நேரம் மற்றும் ஊதியம் தொடர்பான வழிகாட்டுதல்: -

1) பணியாளர்களை சட்டபடியான பணி நேரத்திற்கு மட்டுமே பணிக்கு அமர்த்த வேண்டும்; அவர்களை கூடுதல் மிகை நேர பணிக்குக் கட்டாயப் படுத்தக் கூடாது.

2) பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் அதன் தொடர்பான பலன்கள் தேசிய சட்டங்களுக்கு இணங்குதலை உறுதி செய்தல் வேண்டும்.

3) பணியாளர்கள் அனைவருக்கும் பணிபுரிந்த காலம், விடுப்பு எடுத்த காலம், ஊதியம், கழிவுகள், பிடித்தம் போக மீதி ஊதியம், etc., போன்ற விபரங்கள் உள்ளடங்கிய தனி நபர் ஊதிய சீட்டுகளை எளிய முறையில் விளங்கும் வண்ணம் வழங்க வேண்டும்.

4) PF, ESI போன்ற சட்டப்படி பிடித்தம் செய்வது போக தொழிலாளர்களின் ஊதியத்தில் இருந்து வேறு எந்த ஒரு பிடித்தமும் செய்யக் கூடாது.

5) தொழிற்சாலைகளில் பெண் பணியாளர்களுக்கு பெண் மேற்பார்வையாளர்களை பணிக்கு சட்டப்படி அமர்த்துதல் வேண்டும்.

6) பணியாளர்கள் அவர்களுடைய ஊதியத்தினை வங்கி மூலம் பெறுவதற்கு தங்களுக்கென ஒரு வங்கி கணக்கினை வைத்துக் கொள்ள தொழிற்சாலைகள் அவர்களுக்கு பரிந்துரைத்து உதவி செய்ய வேண்டும். இருப்பினும், அவர்களது ஊதியத்தை வங்கி மூலமாக பெற்றுக்கொள்வது அல்லது பணமாக பெற்றுக்கொள்வது என்பதற்கான முடிவினை பணியாளர்களின் சொந்த விருப்பத்தில் விட்டுவிட வேண்டும்.

7) நிர்வாகத்திற்க்கும் மற்றும் இடம் பெயர்ந்த வெளியூர் பணியாளர்களுக்கும் இடையே உள்ள தகவல் இடைவெளியை சரி கட்ட அவர்களது வட்டார மொழியில் பரிச்சயம் பெற்ற ஒருவரை ஒருங்கிணைப்பாளராக பணியில் நியமித்தல் வேண்டும்.

## IV. விடுதிகள் இயங்குவதற்குண்டான பரிந்துரைகள்: -

### பொது: -

1) பணியாளர்கள் தங்குவதற்க்கு விடுதி வசதியினை தர விரும்பும் தொழிற்சாலைகள் அவ்விடுதி கட்டிடத்தில் தேவையான வசதிகள் அனைத்தும் இருக்கின்றன என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.. தொழிற்சாலை அவர்களது விடுதியை நேரடியாக நிர்வாகிக்கலாம் அல்லது அவர்களது தொழிற்சாலையின் அதிகாரத்திற்கு கட்டுப்படாத ஒரு தனிபட்ட நிர்வாகத்திடம் குத்தகைக்கு விட்டுவிடலாம்..

   வேறு ஒரு ஒரு தனிபட்ட நிர்வாகத்திடம் குத்தகைக்கு விடும்பட்சத்தில், சுகாதாரம், பாதுகாப்பு, பணியாளர் சுதந்திரம் போன்ற முக்கியமான பிரிவுகள் உள்ளடங்கிய இணைப்பினை குத்தகை ஒப்பந்த பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

2) சுதந்திரமாக செயல்பட்டு விடுதிக்குண்டான தீர்மானங்களை எடுப்பதற்கு அதிகாரம் உடையவராக விடுதி பொறுப்பாளர் ஒருவரை பணியில் அமர்த்த வேண்டும்.

3) சிறப்பான மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல் கொடுப்பதற்கும் விடுதி பொறுப்பாளர் விடுதியிலேயே தங்கி இருத்தல் வேண்டும். விடுதி பொறுப்பாளர்

4) தொழிற்சாலையின் விடுதியில் பணியாளர்கள் யாரும் தங்க கட்டாயப்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தனியார் விடுதியிலோ அல்லது தொழிற்சாலைகளால் பரிந்துரைக்கப்படும் விடுதியிலோ தங்குவதற்க்குண்டான முடிவு ஒவ்வொரு தனிபட்ட பணியாளர்களின் விருப்பத்திற்கு உட்பட்டது.

5) தொழிற்சாலை விடுதியில் தங்க விருப்பமிருக்கும் பணியாளர்கள் நேர் காணலின்பொழுதோ, சரிபார்த்தலின் பொழுதோ, பணிக்கு சேரும் பொழுதோ அல்லது பணியில் இருக்கும் பொழுதோ எந்த நேரமும் விடுதியில் தங்கும் அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்கலாம். இது குறித்து அவர்களது பெற்றோர்கள் அல்லது அவர்களது குடும்பத்தின் மூத்த அங்கத்தினர்களுடன் ஆலோசிக்கலாம்.

6) பணியாளர்களின் விடுதி தேவை விண்ணப்பத்தினை தொழிற்சாலை பொறுப்பாளர் விடுதி பொறுப்பாளருக்கு பரிந்துரை செய்வார்.

7) விடுதியிலுள்ள காலியிடங்களை பொறுத்து, விடுதி பொறுப்பாளர் அவர்களுக்குண்டான விடுதி அறையினை ஒதுக்குவார்.

8) மதம், இனம், ஜாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இது போன்ற பாகுபாட்டினை ஏற்படுத்தும் எந்த ஒரு நிலைமையினையும் பொருட்படுத்தாமல் அனைத்து நிலை பணியாளர்களுக்கும் விடுதியில் அறைகள் வழங்கப்பட வேண்டும்.

<u>விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்: -</u>

1) பணியாளர் மற்றும் பெற்றோரின் எதிர்பார்ப்புகள், கலாசாரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள், etc., ஆகியவற்றை கருத்தில் கொண்டு தங்களது விடுதிக்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை தேசிய சட்டதிட்டங்களுக்கு இணங்க வரையறுத்துக்கொள்ள வேண்டும்.

2) விடுதியில் தங்குபவர்களுக்கு விடுதியின் சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும் விடுதியில் தங்கும் ஒவ்வொருவருக்கும் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் அவற்றின் நகல்களை வழங்கிட வேண்டும்.

3) அவ்வாறு வரையறுக்கபட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் விடுதியில் தங்கியிருக்கும் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி சமமாக பொருந்தும் என உறுதி படுத்துதல் வேண்டும்.

<u>சுதந்திரமாக செயல்படுதல்: -</u>

1) இடம் பெயர்ந்த வெளியூர் பணியாளர்களின் சுதந்திரமான செயல்பாடுகளை அதிகப்படுத்த, அவர்களுக்கு அவர்களது பணியிடங்களுக்கு செல்வதற்கு வழிகள் அமைத்து கொடுத்தது போல், அவர்கள் வெளியே சென்று வருவதற்கும் தனியொரு வழியினையும் மற்றும் அதற்குண்டான வசதிகளையும் செய்து தர வேண்டும்.

2) விடுதியில் தங்குபவர்களின் இடப் பெயர்ச்சிகளை விடுதியின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி பதிவு செய்ய வேண்டும்.

3) இடம் பெயர்ந்த வெளியூர் பணியாளர்கள் பல்வேறு ஊர்களிலிருந்து வருகிறபடியால் அவர்களுக்கு விடுதி அமைந்துள்ள ஊரின் தன்மையை பற்றிய விழிப்புணர்வை தனி நபர் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஏற்படுத்த வேண்டும்.

4) இடம் பெயர்ந்த வெளியூர் பணியாளர்களின் பெற்றோர்கள் அவர்களது மகளை பார்ப்பதற்க்குண்டான உரிமையை மதித்து அவர்கள் இருவரும் சந்திப்பதற்க்கு விடுதியின் வளாகத்திலேயே அதற்குண்டான ஏற்பாட்டினை செய்ய வேண்டும். மேலும் வெளியூர் பணியாளர்களின் பெற்றோர்கள் தங்குவதற்கும் உணவிற்கும் தக்க ஏற்பாட்டினை செய்ய வேண்டும்.

5) விடுதியில் வசிப்பவர்களுக்கு தகவல் தொடர்புக்கு ஏதுவாக STD இணைப்புடன் கூடிய கட்டண தொலைபேசி வசதியினை அமைத்து தர வேண்டும். மேலும்

அவர்கள் தங்களது கைபேசிகளை உபயோகித்துக் கொள்ளவும் அனுமதியளிக்க வேண்டும்.

<u>கண்காணிப்புக் குழு: -</u>

1) விடுதி பொறுப்பாளர், தொழிற்சாலையின் பிரதிநிதி, விடுதியில் தங்கியிருக்கும் நபர்களில் முறையாக தேர்ந்தெடுக்கபட்ட 5 நபர்கள் (குறைந்தபட்சம்), ஒரு பெண் மருத்துவர் மற்றும் ஒரு NGO பிரதிநிதி ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை விடுதியில் அமைக்க வேண்டும்.

   விடுதியில் தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கையின் பொருட்டு கண்காணிப்புக் குழுவின் அளவு இருக்க வேண்டும்.

2) விடுதியின் நிதி உட்பட அனைத்து விஷயங்களையும் நிர்வகிக்கும் விடுதி பொறுப்பாளரே இந்த <u>கண்காணிப்புக்</u> குழுவின் தலைவராக இருப்பார்.

3) வசதிகளை அதிகப்படுத்துதல், குறைகள் இருப்பின் களைதல், சுதந்திரமாக செயல்படுவதற்கு வழிவகுத்தல், பெற்றோர்களின் உறவு, etc., போன்ற பல விஷயங்களை குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை இக்குழு கூடி ஆராயும்.

4) இக்குழு தொழிற்சாலையின் நிர்வாகத்திற்குக் கட்டுபடாமல் சுதந்திரமாக செயல்படும்.

5) கண்காணிப்பு குழுவானது எந்த ஒரு நிபந்தனையுமின்றி தொழிற்சாலைகளால் தானாக வழங்கப்படும் உதவிகளை ஏற்றுக்கொள்ளும்.

<u>வசதிகள்: -</u>

<u>விடுதிக் கட்டிடம்: -</u>

1) விடுதிக் கட்டிடமானது உள்ளூர் விதிமுறைகளை பூர்த்தி செய்து தொழிற்சாலை கட்டிடத்திற்கு அப்பாற்பட்டு தனியாக இருக்க வேண்டும்.

2) விடுதியில் தங்கும் ஒவ்வொரு தனிபட்ட நபருக்கும் சராசரியாக 20-35 சதுர அடி வரை வழங்க வேண்டும். மேலும் ஒரு அறைக்கு அதிகபட்சம் 18 லிருந்து 24 நபர்கள் வரை தங்குவதற்கு அனுமதிக்கலாம். ஒவ்வொரு அறைக்கும் எவ்வளவு நபர்கள் இருக்கிறார்கள் என்பதை சைன்போர்ட் மூலம் தெரிவிக்கலாம்.

3) விடுதியில் தங்கும் ஒவ்வொரு தனிபட்ட நபருக்கும் படுக்கை விரிப்பு மற்றும் தலையனை வழங்கப்பட வேண்டும். மெத்தை மற்றும் தலையனை வழங்கினால் வரவேற்க்கதக்கது.

4) விடுதியில் தங்கும் ஒவ்வொரு தனிபட்ட நபருக்கும் பூட்டு மற்றும் சாவி வசதியுடன் கூடிய அலமாரிகளை வழங்க வேண்டும்.

5) விடுதியில் முறையான மற்றும் போதுமான லைட்டிங், ஜன்னல் & காற்றோட்டம் இருக்க வேண்டும்.

6) ஒவ்வொரு தனிபட்ட அறைக்கும் கீழ்கண்ட வசதிகள் இருத்தல் வேண்டும்:

அ) காலணிகளை வைத்துக் கொள்ளும் வசதி;
ஆ) விடுதி அறையின் நுழைவாயிலில் மிதியடி;
இ) மின் விசிறி;
ஈ) ட்யூப் லைட்;
உ) இரவு விளக்குகள்;
ஊ) வாளீ & குவளை;
எ) நெட்லான் கொசு வலை;
ஏ) துணிகளை உலர்த்துவதற்கும், மாட்டி வைத்து கொள்வதற்கும் உண்டான வசதி;
ஐ) உடை மாற்றுவதற்குண்டான வசதி (திரை சீலை);
ஒ) துடைப்பம் மற்றும் முறம்;
ஓ) தண்ணீர் குவளை & டம்ளர்கள்;
ஔ) கண்ணாடி.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு: -

1) இக்கட்டான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விஷயங்களை அடையாளம் கண்டு அதை தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல் - உம் - அவசர கால மணி மற்றும் தீ அணைப்பான் கருவிகளை நிறுவுதல், தீ அணைக்கும் பயிற்சி அளித்தல், அவசரகாலச் சூழ்நிலையில் வெளியேறுவதற்க்குண்டான பயிற்சியினை அளித்தல்; அவசரகால சூழ்நிலையில் நிர்வாகிக்க பயிற்சி அளித்தல்.

2) மேலும் மாற்று திறனாளிகள் மற்றும் நோயாளிகள் ஆகியோரின் இக்கட்டான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விஷயங்களை அடையாளம் கண்டு அதை தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல்;

3) விடுதியில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பவர்களுக்கு சிகிச்சைக்குப்பின் ஓய்வு எடுக்க படுக்கை வசதியுடன் தனியறை அமைத்தல் வேண்டும்.

4) விடுதியில் தங்கும் நபர்களுக்காக ஒரு மருத்துவரை நியமித்தல்.

பாதுகாவல்: -

1) முன்னாள் ராணுவ அதிகாரிகளை பாதுகாவல் பணிக்கு அமர்த்துதல்; விடுதியில் பெண்கள் தங்கும் பட்சத்தில் பெண் பாதுகாவல் அதிகாரிகளை பணியில் நியமித்தல்;

போக்குவரத்து வசதிகள்: -

1) விடுதியில் தங்கியிருக்கும் நபர்கள் வங்கி, கடைகள் மற்றும் வெளியே செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை செய்து தருதல்;

<u>உணவு: -</u>

1) உணவுப் பட்டியலை தயாரித்து, மற்றும் சரிபார்த்து உணவு உட்கொள்ளும் அறையில் பார்வைக்கு வைத்தல்;

2) போதுமான அளவு சத்தான, தரமான மற்றும் சுகாதாரமான உணவினை காலை, மதியம் மற்றும் இரவு - மூன்று வேலைக்கும் வழங்குதல்;

3) போதுமான அளவு சுகாதாரமான குடி நீரை வழங்குதல்;

4) விடுதியின் சமையலறை மற்றும் ஸ்டோர்ஸ் ரூமை சுத்தமாக பராமரிக்க வேண்டும்; மேலும் அதிக உணவுப் பொருட்களை வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

5) தட்டுகள் மற்றும் டம்ளர்கள் உட்பட அனைத்து பாத்திரங்களையும் சுத்தமாக கழுவி துடைக்க வேண்டும். சுத்திகரிக்கபட்டால், வரவேற்கதக்கது.

6) உணவு உட்கொள்ளும் மற்றும் பரிமாறும் அறைகள் போதுமான காற்றோட்டத்துடனும், மின் விசிறிகளுடனும் இருத்தல் வேண்டும்;

7) திரவ மற்றும் திட கழிவுகளை உரிய முறையில் வெளியேற்றுதல்;

8) சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்தல்;

9) ஈக்கள் வராமல் தடுக்க வேண்டும்;

10) ஆறு மாதத்திற்கு ஒரு தடவை விடுதியின் கேண்டினில் பணிபுரியும் நபர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்;

11) கேண்டினில் பணிபுரியும் நபர்கள் உடுத்தும் ஆடைகளுக்கு நியதிகளை நிர்ணயித்தல்;

12) விடுதியில் வழங்கப்படும் உணவின் தரத்தினை கண்காணிக்கவும் மற்றும் உணவுப் பட்டியலை தயாரிக்கவும் விடுதியில் தங்கியிருக்கும் நபர்களை உள்ளடங்கிய ஒரு கேண்டின் குழுவை அமைத்தல் வேண்டும்.

<u>துவைத்தல் & சுத்தம் செய்தல்: -</u>

1) போதுமான அளவு குளியலறை மற்றும் கழிவறை வசதிகள் வழங்கப்பட வேண்டும். கீழ்கண்ட அளவு கோலை வழிகாட்டுதலாக பின்பற்றலாம்: -

<u>குளியலறை: -</u>

| | | |
|---|---|---|
| குளியறைகளின் எண்ணிக்கை | → | 20 நபருக்கு ஒன்று |
| குளியறையின் அளவு | → | 4' X 5' |
| டைல்ஸ் | → | 1.5 மீ வரை |
| ரூஃப் வித் டஃப் லைட் | | |
| குப்பைத் தொட்டி | → | 1 குளியலறைக்கு ஒன்று |
| ட்யூப் லைட் | → | 1 |
| வாளி மற்றும் குவளை | → | 1 |
| தண்ணீர் குழாய் | → | 1 |
| சுடு தண்ணீர் குழாய் | → | 5 குளியலறைகளுக்கு ஒன்று (குளியலறைக்கு வெளியே பொருத்தப்பட வேண்டும்) |

<u>கழிவறை: -</u>

| | | |
|---|---|---|
| டாய்லட்களின் எண்ணிக்கை | → | 20 நபருக்கு ஒன்று |
| டாய்லட் அளவு | → | 2.75' X 2.5' |
| டைல்ஸ் | → | 1 மீ வரை |
| ரூஃப் வித் டஃப் லைட் | | |
| குப்பைத் தொட்டி | → | 1 கழிவறைக்கு ஒன்று |
| ட்யூப் லைட் | → | 1 |
| வாளி & குவளை | → | 1 |
| தண்ணீர் குழாய் | → | 1 |

துணி துவைக்க வசதிகள் (ஒவ்வொரு 200 நபர்களுக்கும்): -

| | | |
|---|---|---|
| தண்ணீர் குழாய் | → | 5 |
| துவைக்கும் கல் | → | 5 |
| பக்கெட் / பேஸின் | → | 2 |
| ரூஃப் வித் டஃப் லைட் | | |

ஈரத் துணிகளை உலர்த்துவதற்கான வசதிகள்: -

திறந்த வெளியில் துணிகளை உலர்த்துவதற்கான கயிறு கட்டி கொடுத்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

கழிவுகளை வெளியேற்றும் முறை: -

1) கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை என பிரித்துக் கொள்ளவும்;

2) மக்கும் குப்பைகளை குழியில் போடுதல் அல்லது குப்பை பொருளின் தன்மையை பொருத்து எரித்தல்;

3) தனி நபர் சுகாதார கழிவுகளை இன்சினெரேட்டர் கொண்டு வெளியேற்றவும்;

4) இதர மக்கா கழிவுகளை மறு உபயோகத்திற்கு விற்பனை செய்யவும் அல்லது சுற்றுப்புற சூழ்நிலையை பாதிக்காவண்ணம் வெளியேற்றவும்.

<u>பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் பொது நல செயல்கள்: -</u>

1) போதுமான அளவு பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் பொது நல செயல்கள் வழங்கப்பட வேண்டும். கீழ்கண்ட அளவுகோலை வழிகாட்டுதலாக பின்பற்றலாம்: -

தொலைக்காட்சி பெட்டி
உள்ளே மற்றும் வெளியே விளையாடுவதற்கு வசதிகள்
யோகா வகுப்புகள்
தையல் வகுப்புகள்
கணினி வகுப்புகள்
தட்டச்சு வகுப்புகள்
ஓவியம் மற்றும் கை வேலைப்பாடு வகுப்புகள்
சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடு செய்தல்
சுய முன்னேற்றம் மற்றும் உந்துதலுக்கான நிகழ்வுகள்
தொலைதூர கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்தல்
கலாச்சார நிகழ்வுகள் / போட்டிகள்
நூலக வசதிகள்
தொழிற்சாலை தினம் / ஆண்டு விழா
கண்ணாடி ஓவியம்